## சுருக்கம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு. ம. ராஜேஷ், த/பெ (லேட்) பெ. ந. மதியழகன், முன்னாள் உற்பத்தி உதவியாளர் – தொழில் வணிக இயக்குநரகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் [பணி II (1)] துறை

அரசாணை (நிலை) எண்: 43

நாள்:15.06.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம், ஆனி 1

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 02.03.2016.
2. முதன்மைச் செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.31009/இபி1/2005, நாள் 10.11.2017.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 31009/இபி1/2005, நாள் 16.12.2019 மற்றும் 10.02.2020.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் 01.02.2016க்கு பிறகு பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணி வரன்முறை அரசளவில் செய்யப்படவேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் படிக்கப்பட்ட முதன்மைச் செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு. ம. ராஜேஷ், த/பெ (லேட்) பெ. ந. மதியழகன், முன்னாள் உற்பத்தி உதவியாளர் அவர்கள் தொழில் வணிக இயக்குநரகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 23.11.2017 அன்று முற்பகல் பணியேற்பு செய்துள்ளார். எனவே, பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை வழங்கக் கோரி தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் பார்வை 4ல் படிக்கப்பட்ட தனது கடிதம் வாயிலாக அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைத்துள்ளார்.

3. இதனிடையில், பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழ்நிலையில், தனியரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, பார்வை 3ல் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28 (1)–ன்படி, தொழில் வணிக இயக்குநரகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. ம. ராஜேஷ், த/பெ (லேட்) பெ. ந. மதியழகன், முன்னாள் உற்பத்தி உதவியாளர் அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 23.11.2017 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது குறித்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.3407/Q1/2020–2, நாள் 02.06.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத் துறை அ.சா.எண்.13551/ஜி2/2020, நாள் 05.06.2020 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

டாக்டர் கே. கோபால்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
திரு. ம. ராஜேஷ், இளநிலை உதவியாளர்,
தொழில் வணிக இயக்குநரகம்,
சென்னை – 32. (2 நகல்கள்).
(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை –32 அவர்கள் வழியாக).
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை –32.
தலைமை கணக்கு அலுவலர்,
சென்னை 18/35.
தலைமை கணக்கு அலுவலர்,
சென்னை 18 / 35. (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை – 8.

<u>நகல்:—</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை —9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
சென்னை – 9.
சுத்த நகல் / உதிரிகள்.
(கோப்பு எண்.11245/பணி II(1)/2019).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Endt Rc.No. 1808/A2/2020-1, DIC, Cuddalore.
Dt. 12.2020.

Forwarded.

JOINT DIRECTOR (ENGG.)
GENERAL MANAGER
DISTRICT INDUSTRIES CENTRE
CUDDALORE

9/12/2020

To
Thiru M. Rajesh,
Jr. Asst,
DIC, Cuddalore.